தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 13 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 15-6-57 | சனிக்கிழமை | இதழ் 39

உலகம் இவ்வளவு தான்!

[9-6-'57 அன்று சென்னை கோகலே மன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.]

அன்புமிக்க தலைவர் அவர்களே! பெரியோர்களே! தோழர்களே!

'உலகம் இவ்வளவுதான்!' என்ற தலைப்பில் பேசுமாறு இங்கே என்னைப் பணித்திருக்கிறார்கள். உலகம் பெரியது; பரந்தது; அதை இவ்வளவுதான் என்கிறானே இவன் என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! எனக்குப் பின்னால் இரண்டு பெரும் பொருள்களில், தோழர் மனோகரன் அவர்களும், டி. கே. சீனிவாசன் அவர்களும் பேச இருக்கிறார்கள். அவர்கள் பேசப் போகும் பொருள் பெரியதாக இருந்தாலும், என்னைப்பொருத்த வரையில் அவர்களையும், அவர்கள் பேசப்போகும் பொருளையும் உள்ளடக்கிய 'உலகம் இவ்வளவுதான்!'

இரண்டு வகைப்பட்டவர்கள் தான் உலகத்தைப் பற்றிச் சுலபமான முடிவுக்கு வருவார்கள். ஒரு வகையினர் போதையிலிருப்பவர்கள்; மறுவகையினர் மயானத்திற்குப் பிணம் போவதைப் பார்ப்பவர்கள். போதையிலிருப்பவனுக்கு உலகத்தில் எதுவும் துச்சமாகப் படுகிறது. "இந்த உலகம் என் கைக்குள் இருக்கிறது" என அவன் நினைக்கிறான். உலகத்தில் ஒரு அணுவாக அவன் உட்கார்ந்திருந்தாலும், மிகப் பெரிய உலகம் அவன் கண்ணுக்கு ஒரு அணுவாகப் படுகிறது. 'ப்பூ..... இவ்வளவு தானா உலகம்...!' என்று ஏளனமாகப் பார்க்கிறான். மயானத்திற்குப் பிணம் போவதைப் பார்க்கிறவன், அந்தப் பிணத்தை வைத்தே உலகத்தை முடிவு கட்டுகிறான். "ம்...உலகம் இவ்வளவுதான்...! எப்படி எல்லாம் வாழ்ந்தான்? காசிக்குப் போனான்; கல்கத்தாவுக்குப் போனான்; கல்வி கற்றான்; கலை உலகில் ஈடுபட்டான்; ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினான்; போடாத வேடமெல்லாம் போட்டான்; சாசுவதமாக வாழப் போவதாக எண்ணித் தலைதெரியாமல் ஆடினான்! இன்று நீண்டு படுத்து நிழலாகிவிட்டானே! ஹூம்...வாழ்க்கை இவ்வளவு தான்! உலகம் இவ்வளவுதான்!" என்று அவன் முடிக்கிறான். இந்த மயான வைராக்கியம் மறுநாள் வரை இராது என்றாலும், அந்த நேரத்தில் அவனுக்கு உலகம் மாய உருண்டையாகத் தெரிகிறது. காயத்தைப் பொய் என்றும்; காற்றடைந்த பை என்றும் கூறி வாழ்வைத் துறந்து ஓடினார்களே வேதாந்திகள், அவர்களும் உலகத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்தவர்கள்தான். ஆனால், உலகில் இன்பம் நுகர்ந்து, வாழ்ந்து, அனுபவித்து மாண்டவர்கள், பிறப்பினால் கிடைத்த காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு 'உலகம் இவ்வளவுதான்!' என்று கூறிவிட்டு ஓடினார்கள். வேதாந்திகள் வாழ்வைப் பயன்படுத்தாமலே பயப்பட்டார்கள். எதைத் தொட்டாலும் அவர்களுக்கு மாயமாகத் தெரிந்தது. 'இது வேண்டாம் இது வேண்டாம்' என்று தள்ளினார்கள். இப்படி ஒவ்வொன்றாகத் தள்ளிவிட்டு, உலகத்தையே தள்ளிவிட்டதாக இறுமாந்தார்கள். உலகத்தைப்பற்றி இவர்கள் கொண்ட முடிவு சரிதான் என்றாலும், இறுதியாக வரவேண்டிய இடத்துக்கு ஆரம்பத்திலேயே வந்துவிட்டதுதான் இவர்கள் செய்த தவறு. உலகம் தூசு, துச்சம் என முடிவுக்கு வருகிறவன், உலகத்தை அனுபவிப்பவனாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான், வாழ்கின்ற இடைக்காலம் வளமுள்ளதாகவும் இருக்கும். துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு "அம்போ" என்று ஓடிவிடுவதில் அர்த்தமில்லை. சந்நியாசியின் துறவுக்குணமும், சம்சாரியின் கல்யாண குணமும் ஒருங்கே அமையவேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு அணுவையும் அனுபவிக்கவேண்டும். அதே நேரத்தில், துயர்ப்பாடுகளிலும், இடர்ப்பாடுகளிலும் கலங்கக்கூடாது. துயரங்கள் தோன்றும் போது, "உலகம் சிறியது! எப்படியும் நாம் சாகத்தான் போகிறோம்! இதில் கண்ணீர் விடுவது எதற்காக?" என்ற முடிவுக்கு வந்துவிட வேண்டும். துன்பங்களைத் தூசுகளாக்கிவிட வேண்டும். அப்போது விசாலமான இதயம் பிறக்கும். வெளிச்சம் மிகுந்த உலகம் தோன்றும். அழகு மிகுந்த வாழ்வு அமையும். அமைதி என்றென்றும் நிலவும். உலகின் துன்பங்கள் வடிகட்டப்பட்டு, இன்பங்கள் மட்டும் நமக்குக் கிடைக்கும். அதனால்தான் பெரியவர்கள் சொன்னார்கள், எல்லாவற்றிற்கும் மனசுதான் காரணம் என்று. ஆமாம்! நம் மனத்தளவு எவ்வளவோ அவ்வளவுதான் உலகம்! நம்மனம் சிறியதாக இருந்தால் உலகம் பெரியது. நம்மனம் பெரியதாக இருந்தால் உலகம் சிறியது. துணிவுமிக்கவன் பாம்பை ரப்பராகக் கருதுகிறான். பயங்கொண்டவன் ரப்பரைப் பாம்பாகக் கருதுகிறான். உலகம் முழுவதையும் கவர ஆசைப்பட்ட நெப்போலியன், பாம்பை ரப்பராகக் கருதியவன். உள்வீட்டுக்குள் ஒண்டிக்கிடப்பவன், ரப்பரைப் பாம்பாகக் கருதியவன். பாம்பை ரப்பராகக் கருதுவதில் ஆபத்து இருக்கலாம். அந்தப் பாம்பாலேயே கடிக்கப்பட்டு மரணமடையவும் நேரலாம். ஆனால் அப்படிக் கருதுகிற இதயம் கொண்ட துணிவு இருக்கிறதே அது வாழுங்காலம் குறுகியதாயினும், வலிவுமிக்கது. அந்த இதயத்திற்கு ஒரு முறைதான் சாவு. அஞ்சி அஞ்சி மடியும் இதயத்திற்கு அன்றாடம் சாவு. அதனால்தான், பாம்பை ரப்பராகக் கருதும் துணிவுவேண்டுமென்கிறேன். உலகில் வாழ்ந்த மாவீரர்களையெல்லாம் எடுத்துக் கொண்டு பார்த்தீர்களானால் அவர்கள் பாம்பை ரப்பராகக் கருதியவர்கள் தான். சிலர் அந்தப் பாம்பை ரப்பராகவே மாற்றியும் இருக்கிறார்கள். ஒவ்வொரு காரியத்தையும் தாங்கள் செய்ய முடியும் என்ற நம்பிக்கையே அவர்களுக்கு அந்த வலுவைத் தந்திருக்கிறது. அவர்கள் செய்ய நினைத்ததைச் செய்தார்கள். அந்தச் செய்கையில் மடிந்தார்கள் என்றாலும், கோடியில் ஒருவராகத் திகழ்ந்தார்கள். இலக்கண மனிதர்களாக வாழ்ந்தார்கள். இன்று நேற்றல்ல, ஈராயிரம்

— 6ம் பக்கம் —

கண்ணதாசன்

9

துருக்கியப் படையின் உதவித் தலைவனான ஜாபர்அலியைக் கொன்றது, தனது மகள் உம்மதுல்தான் என்றுகேட்டு தலை கவிழ்ந்த யஜ்தானி, சுயநினைவு பெறுவதற்கு நெடுநேரம் பிடித்துவிட்டது. என்னுடைய சட்டளையை அன்புடன் ஏற்று அதன்படி நடந்தவனை - தீயில் குதி என்றாலும் தட்டாது குதித்தவனை - பகைப்புலம் வருகிறது புறப்படு அணிவகுத்து என்ற போதிலும், அஞ்சற்க என்று எனக்கும் தைரியமூட்டியவனைக் கொன்ற நீ இத்தனை நாளாய் என்னிடம் ஏன் சொல்லாது மறைத்தாய்?'' என்று கேட்பதற்காக, உம்மதுல் உட்கார்ந்திருந்த பக்கம் திரும்பினான் யஜ்தானி. அங்கே உம்மதுல் இல்லை. அந்த இடத்தில், உம்மதுலின் அழகிய கரும்பூனை உட்கார்ந்திருந்தது. எழுந்து போய் மாடத்துப் பலகணி வழியாகப் பார்த்தான். சற்று தொலைவில் தெரிந்த நந்தவனத்தில், வர்ணம்தீட்டிய வண்ணத்திப்பூச்சியைப்போல பல வர்ண ஆடையுடுத்திய ஒரு பெண், உம்மதுலின் அருகில் உட்கார்ந்து குழைந்து குழைந்து பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. தைமூரைப் போல், யாரோ ஒருத்தி, உம்மதுல் உண்மையில் ஒரு வாலிபன் தானென்று கருதி மையல் கொண்டாள் போலும் என யஜ்தானி எப்படியோ சரியான முடிவு கட்டிவிட்டார். ஆனால், உம்மதுலுடன் அன்று யாராவது ஒரு ஆடவன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்திருந்தால், யஜ்தானியின் கோபம் கொழுந்துவிட்டு எரிந்திருக்கும். ''கொடியவன்! இவன் இட்ட தீதான் - போதனைதான் என் நண்பனைக் கொல்ல உம்மதுலைத் தூண்டியிருக்கும்'' என்று அன்றே பழிவாங்கியிருப்பான். மதத்திலே கட்டுப்பட்டவர்களிடம் ஒற்றுமை இருக்கிறது; பலச்சேர்க்கை இருக்கிறது; ஆனால் அந்த ஒற்றுமையிலும் பலச்சேர்க்கையிலும் தெய்வசக்தி இருப்பதாக அவர்கள் நினைப்பதால்தான், எதிரியின் மெய்ப்பொருளையும் எடுத்துக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். வரிந்து கட்டிக் கொண்டு, வீட்டேனு பார் என்று கிளம்பிவிடுகிறார்கள்.

உம்மதுலையும் இன்னொரு யுவதியையும் பூங்காவில் கண்ட யஜ்தானி, அவர்களின் உரையாடலில், சந்திப்பில் உட்பொருள் இருப்பதாகக் கருதவில்லை. நெடுநாட்களுக்கு முன்பு காணமற்போன ஒருவன், செத்துவிட்டான் என்று செய்தி கிடைத்தால், குடியேறும் புதிய கவலையால் தாக்குப்பட்டவனைப்போல் சித்திர நாற்காலியில் அமர்ந்தான். அதுவரை ஊமையாக இருந்த அவன் மனைவி சேமியா, அவனருகில் போய், ''நடந்தது நடந்துவிட்டது. இனி யாரால் என்ன செய்யமுடியும்! எல்லாம் உங்களால் வந்த வினைதான்'' என்று இரக்கத்தோடு தன் கணவன்மீது குற்றம் சுமத்தினாள் சேமியா.

துக்கம் தொண்டையை அடைத்தாலும், மனைவியிடம் காரணம் கேட்பதைப்போல் நிமிர்ந்து பார்த்தான் யஜ்தானி. அந்த நேர்கொண்ட பார்வையால் எத்தனையோ எதிரிப் பட்டாளங்களை நிர்மூலமாக்கி போர்க்களத்தையே நெறுதுளியாக்கியிருக்கிறான் அவன். துருக்கியச் சேனையின் அத்தனை வேல்களும், யஜ்தானியின் விழிமுனையை எதிர்நோக்கியிருந்த காலம் ஒன்று இருந்தது. இப்போது அவன் கௌரவ அடிமையைப்போல், மாளிகை போன்ற சிறையில் தன் மனைவியை ஏறிட்டுப் பார்க்கிறான். விழியிலே ஒளியிருந்தது. அந்த ஒளிக்கு சக்தியில்லை. பார்வையிலே வேகமிருந்தது; அந்த வேகத்திற்கு அதிகாரம் தீர்ந்துவிட்டது: அன்புத்துணைவி- அருமைமனைவி சேமியாதான் பணிந்து நிற்கிறாள். பரிவு காட்டுகிறாள். கேள்வி தொங்கும் கணவனின் பார்வைக்கு மரியாதையோடு பதில் சொல்கிறாள்!

''நீங்கள் அவளைப் பெண்ணாக வளர்த்திருந்தால், அவள் இப்படியா வளர்ந்திருப்பாள்! திரைக்கு வெளியே தலையை நீட்டியிருப்பாளா? ஆடையைப் பார்த்திருப்பார்களா? அவளது அலை கூந்தலையாவது கண்டிருப்பார்களா? போர் போர் என்றீர்கள். பொல்லாப்புத் தலையெடுத்தது.'' சேமியா சரமாரியாக தொடுத்துக்கொண்டே போனாள் குற்றச்சாட்டுகளை. அவள் சாட்டிய குற்றங்களில் ஆயிரத்தில் ஒரு பங்காவது தன் மீது இருக்கிறது என்பதை உணர்ந்ததால், யஜ்தானி ஊமையாகவே உட்கார்ந்திருந்தான். எண்ணங்கள் கடந்த காலச் செயல்களையே வட்டமிட்டுக் கொண்டிருந்ததால், அவனுடைய விழிகள் அந்த நேரத்தில் சிலைகளில் பதிக்கப்பட்டிருக்கும் கண்ணாடி வில்லைகளைப்போல் வெறும் மின்னலோடு நின்றன.

அப்போது யாரோ கதவைத் தட்டினார்கள். சேமியா விரைந்து சென்று கதவைத் திறந்தாள். உம்மதுல் உற்சாகத்தோடு உள்ளே நுழைந்தாள்.

''உனக்குக் கொண்டாட்டமாக இருக்கிறது. அப்பாவைப் பார்! அழுத கண் காயவில்லை'' என்று அடித்தொண்டையில் கூறினாள் சேமியா.

''அப்பா வருத்தப்படுகிறார் அவரது துணைவன் இறந்தான் என்பதற்காக. ஆனால் அந்த நண்பன் துருக்கிக்கே ஊறு விளைவிக்க முனைந்தான என்பதை என்னுடைய வாக்குமூலத்திலிருந்து ஏன் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடாது? துருக்கியின்மீது உயிரையே வைத்திருக்கும் நான், ஏன் அந்தப் படைத் தலைவனைக் கொல்ல வேண்டும்? எனக்கும் அவனுக்கும் பிரத்தியேகத் தகராறு என்ன? எவனையும் தீண்டவிடாத நெருப்பாக இருப்பாள், கற்பைக் காப்பாற்றுவாள் என்றெல்லாம் என்னைப் பற்றி நீங்கள் எண்ணியிருப்பீர்கள். என் கன்னத்தைத் தொட்டு, கனி உதடைக்கிள்ளி, நெற்றியை நுகர்ந்து, ஓராண்டு காலம் என்னோடு இரண்டறக் கலந்திருந்த அந்தக் காதலனையே நான் கொன்றுவிட்டேன் என்றால் அவரை நான் சாதாரணக் குற்றத்திற்காகவா கொன்றிருப்பேன்! அப்பா, ஏன் இதைச் சிந்திக்கக்கூடாது. அப்படியானால் அப்பாவும் ...!''

''உம்மதுல்!'' என்று கடிந்து கூவினான் யஜ்தானி.

சேமியா இருவரையும் சமாதானம் செய்து தனித்தனியாகப் பிரித்து வைத்தாள்.

★

காலை அரும்பியது. உம்மதுல் வழக்கம்போல் உற்சாகமாகவே எழுந்தாள். தலையணைக்குப் பக்கத்தில், ஏலக்காயும், வாசனைக் கிராம்பும் கலந்த பசும்பால் அவளுக்காக ஊற்றிவைக்கப் பட்டிருந்தது. பாலைக் குடித்துவிட்டு பளிங்குக்கிண்ணத்தைக் கீழே வைப்பதற்கும், சேமியா படுக்கையறையைத் திறப்பதற்கும், சரியாக இருந்தது.

''எழுந்துவிட்டாயா கண்ணே!''

''தூங்குபவரை என்ன தூக்கமா என்பது, சாப்பிடுவதைப் பார்த்தும் எதிரே நின்றுகொண்டு, சாப்பாடாகுதோ என்று கேட்பது போன்ற அசட்டுக் கேள்விகளுக்கு நீங்கள்தான் மூலகர்த்தாவோ'' என்று கிண்டலாகக் கேட்டாள் உம்மதுல். சேமியா, குழந்தையின் விஷமத்தனத்திலே குதூகலம் காணத்துடித்ததால், உம்மதுலின் துடுக்குத்தனத்தை அவள் பொருட்படுத்தவில்லை. சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே திருப்தி இருந்தது. கர்வமிருந்தது.

'உம்மதுல், இப்படித்தான் **ஷைநபூ** துடுக்குத்தனமாகப் பேசிக்கொண்டிருந்தாள். அவளுக்கு என்ன கதி நேர்ந்தது தெரியுமா? ஜாக்கிரதை! நீயும் பாதுஷாவிடம் நெருங்கிப் பழகிக் கொண்டிருக்கிறாய்! ஆமாம், சொல்லிவிட்டேன்!' என்று பயம் காட்டினாள் சேமியா.

''என்ன சொன்னீர்கள் ஷைநபூவா! பாதுஷாவின் முதல் மனைவியல்லவா அவள்!'' என்று கேட்டாள் உம்மதுல்.

''ஆமாம், உனக்கெப்படித் தெரியும்?''

''எனக்கு ஒன்றுமே தான் தெரியாதென்கிறீர்கள். ஷைநபூவை நான் பார்த்திருக்கிறேன்; பேசியிருக்கிறேன்.''

''நம்பமுடியவில்லை, மகளே!''

''நம்பவைக்கிறேன். முதலில் அவளைப் பற்றிய கதையைச் சொல்லுங்கள். அவளுக்கும் பாதுஷாவுக்கும் என்ன தகராறு? சொல்லுங்களம்மா!''

''அந்த வயிற்றெரிச்சலையா கொட்டச் சொல்கிறாய்! அது ஒரு துன்பக் கதை மகளே. ஷைநபூவைப் பார்த்திருக்கிறேன் என்கிறாயே! அவள் அழகில் குறைந்தவளாகவா படுகிறாள்! காந்தச் சிலைபோல் இல்லையா? ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவளைப் போல் இருப்பாளே!''

''ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவளில்லையா ஷைநபூ?''

''இல்லை! தைமூரின் ஆளுகைக்குட்பட்ட ஒரு பட்டு வியாபாரி அவள் தந்தை. தாய் ஒரு

— 7-ம் பக்கம் —

கிழவன் மனைவி

'''தமிழ்நாடு' பற்றி சட்டசபையில் வாக்கெடுப்பு நடந்த போது, 127 **தமிழர்கள்** கைதூக்கினார்கள். 'எல்லைப் பிரச்சினை தீரும் வரை எனக்குள்ள தொல்லை தீராது' என்று மேடைகளிலெல்லாம் முழக்கமிட்ட விநாயகம்கூடக் கையைத் தூக்கினார். எவ்வளவு கம்பீரமாகப் பேசினார்; மந்திரிகளுக்கெல்லாம் சவால் விட்டார். சட்டசபையில் அன்று நான் திரும்பிப் பார்த்தேன. அவர் எனக்குப் பின்னால்தான் அமர்ந்திருந்தார். பாவம்! அது கிழட்டுக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட மணப்பெண் தலைகவிழ்ந்து கால் மெட்டியைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோலிருந்தது. அன்று அவர் பேசிய பேச்சென்ன! அறைகூவலென்ன!''

—ஆள்வார்பேட்டைக் கூட்டத்தில்

அறிஞர் அண்ணா.

காஞ்சி இருக்கக் கலிங்கம்...

வித்துவான்
ந. சுப்பு ரெட்டியார்,
எம். ஏ., பி. எஸ்ஸி., எல். டி.

கருணாகரத் தொண்டைமான் முதற் குலோத்துங்க சோழனின் படைத்தலைவர்களில் முதன்மை பெற்று விளங்கியவன்; கலிங்கப் போரை நேரில் சென்று நடத்தித் தன்னரசனான விசயதரனுக்கு வாகைமாலை சூடியவன். எனவே, கவிஞர் சயங்கொண்டார் குலோத்துங்கனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட கலிங்கத்துப் பரணியில் இவனையும் சில இடங்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார். குலோத்துங்கனைத் திருமாலின் அவதாரம் என்று சிறப்பித்துப் பாடியவர் இவனை அத்திருமாலின் சக்கரம் என்று உருவகித்துப் பாடுகிறார். நூலில் இவனைப்பற்றி வந்துள்ள செய்திகளைத் தொகுத்துக் கூறுவோம்.

கருணாகரன் என்ற பெயர் இராமபிரானின் திருநாமங்களுள் ஒன்று என்பதைக் கம்பராமாயணத்தால் அறியலாகும். அணை கட்டுவதற்குமுன் இராமன் வருணனை வேண்டி தருப்ப சயனத்திலிருந்ததைக் கூறுங்கால்,

தருண மங்கையை மீட்பதோர்
நெறிதரு கென்னும்
பொருள்ந யந்துநன் நூல்நெறி
யடுக்கிய புல்லில்
கருணை யங்கடல் கிடந்தனன்
கருங்கடல் நோக்கி
வருண மந்திரம் எண்ணினன்
விதிமுறை வணங்கி.

என்ற பாடலிலும், பரதன் கங்கை வேடனாகிய குகனுக்குத் தன் தாயை அறிமுகம் செய்யுங்கால் "கடுமையார் கானகத்துக் கருணையார் கலியேக" என்ற தொடரிலும் 'கருணாகரன்' என்ற பெயரின் பொருளை விளக்கிக் கூறுதலைக் காண்க. இவற்றை யெண்ணியே சயங்கொண்டாரும்,

இலங்கை யெறிந்த
கருணா கரன்றன்
இசைவெஞ் சிலையின்
வலிகேட்பீர்
கலிங்க மெறிந்த
கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ.

என்று பாடியுள்ளார் என்று கொள்ளலாம். இருவரும் கருணாகரப் பெயருடையராயினும் ஒருவன் இலங்கையெறிந்த புகழுடையவன்; மற்றவன் கலிங்கமெறிந்த புகழுடையவன்.

கருணாகரத் தொண்டைமான் பல்லவ அரசகுலத்தைச் சார்ந்தவன்; தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் பெற்றவன்; வண்டை என்ற ஊரின் தலைவன். இவ்வாறு சிற்றரசனாகத் திகழ்ந்த இவன் குலோத்துங்கனின் தலைமைச் சேனாதிபதியாகவும் மந்திரத் தலைவனாகவும் விளங்கினான். இச்செய்திகள்,

…ண்ட லிகரும்
மாநில வேந்தரும்
…ந்து ணங்கு
கடைத்தலை வண்டைமன்
…தாண்டை மான்முதல்
மந்திரப் பாரகர்
சூழ்ந்து தன்கழல்
சூடி இருக்கவே
இறைமொ ழிந்தளவல்
எழுக லிங்கமவை
எறிவ னென்றுகழல்
தொழுதனன்
மறைமொ ழிந்தபடி
மரபின் வந்தகுல
திலகன் வண்டைநகர் அரசனே
வண்டை வளம்பதி பாடீரே
மல்லையும் கச்சியும் பாடீரே
பண்டை மயிலையும் பாடீரே
பல்லவர் தோன்றலைப்பாடீரே.

என்ற தாழிசைகளால் அறியலாகும். இன்னும் கருணாகரன் பல இடங்களில் 'வண்டைநகர் அரசன்' என்றும், 'வண்டையர் அரசன்' என்றும், 'வண்டையர் கோன்' என்றும் நூலில் குறிக்கப் பெறுகிறான். மத்திய காலத்துச் சோழப் பேரரசில் பல்லவ வேந்தர்கள் தம் பழைய பெருவலிமை குன்றி சோழர்களின்கீழ் அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாகவும், ஏனைய அதிகாரிகளாகவும் வாழ்ந்ததுடன், தொண்டை நாட்டிலும் சோணாட்டிலும் பிறவிடங்களிலும் சிறியவும் பெரியவுமான ஊர்களுக்குத் தலைவர்களாகவும் வாழ்ந்தனர் என்பதைக் கல்வெட்டுகளால் அறியலாம். அவ்வாறு அமர்ந்த பல்லவ வேந்தர்களுள் இக்கருணாகரனும் ஒருவன்.

குலைத்த கருணாகரத் தொண்டைமான்

கருணாகரன் ஆண்ட வண்டை என்ற ஊர் தொண்டைநாட்டிலுள்ள தென்றும், சென்னைக்கும் செங்கற்பட்டுக்கும் இடையில் புகைவண்டிப் பாதையில் ஒரு நிலையமாக அமைந்துள்ள வண்டலூரே அவ்வண்டை என்றும் காலஞ்சென்ற திரு. வி. கனகசபைப் பிள்ளை, டாக்டர் ஹீல்ஷ் துரை போன்ற வரலாற்று அறிஞர்கள் கருதினர். அவர்கள் அங்ஙனம் கருதினமைக்குக் காரணம், கருணாகரன் பல்லவ மரபினனாய்த் தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் பெற்றிருப்பதும், தொண்டைமண்டல சதக நூலார் அவனைத் தொண்டை நாட்டினனாகப் பாடியுள்ளதுமாகும். ஆனால், திரு. மு. இராகவய்யங்கார் அவர்கள் அவ்வண்டை என்ற ஊர் தொண்டை நாட்டிலுள்ள வண்டலூர் அல்லவென்றும், அது சோழநாட்டிலுள்ள ஓர் ஊர் என்றும், அந்த ஊர் கல்வெட்டுக்களில் 'வண்டாழஞ்சேரி' என்று வழங்குகிறதென்றும், அந்த வண்டாழஞ்சேரியே இப்பொழுது வண்டுவாஞ்சேரி என மருவி வழங்குகிறது என்றும் கருதுகிறார்கள். அதற்கு ஆதாரமாக அவர் குறிப்பிடும் கல்வெட்டு :

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இராஜகேசரி வன்மரான திருபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க தேவர்க்கு யாண்டு நாற்பத்துமூன்று, ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில் நாட்டுத் திருவத்தியூராழ்வார்க்குச் சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழவளநாட்டுத் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரியுடையான் வேளான் கருணாகரனான தொண்டைமானார் தேவியார் அழகிய மணவாளனி மண்டையாழ்வார் வைத்த திரு நுந்தா விளக்கு."

இதில் குறிப்பிடப் பெற்றுள்ள 'கருணாகரனான தொண்டைமானார்'தான் கருணாகரத்தொண்டைமான் என்பது திரு. அய்யங்கார் அவர்களின் கருத்தாகும். அமைச்சர் குலம்போன்ற உயர் பதவியிலுள்ள மகளிரை ஆழ்வார் என்று வழங்குதல் அக்காலத்து வழக்கு என்பதற்கும் கல்வெட்டுகளிலிருந்து சான்றுகளை எடுத்துக்காட்டுகிறார்கள். அவ் வண்டுவாஞ்சேரீ தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் தாலூகாவில் தென்கிழக்கில் திருநறையூராகிய நாச்சியார் கோவிலுக்கும் திருச்சேறைக்கும் இடையில் உள்ளது.

கருணாகரத் தொண்டைமானுக்குத் தமையன் ஒருவன் இருந்தான் என்றும், அவன் கருணாகரன் கலிங்கத்தின்மேல் தண்டெடுத்துச்சென்றபொழுது துணைப்படைத் தலைவனாகச் சென்றான் என்றும் சயங்கொண்டார் குறிப்பிடுகின்றார்.

தொண்டை யர்க்கரசு
முன்வ ருஞ்சுரவி
துங்க வெள்விடை
உயர்த்த கோன்
வண்டை யர்க்கரசு
பல்ல வர்க்கரசு
மால்க ளிற்றின்
மிசை கொள்ளவே.

என்ற தாழிசையால் இவற்றை அறியலாம். தமையன் காஞ்சியிலிருந்து தொண்டைநாடு முழுவதும் ஆண்டுகொண்டிருந்ததால் 'பல்லவர்க்கரசு' என்று குறிப்பிடப் பெற்றுள்ளான். குலோத்துங்கனுக்குப் படைத்தலைவனாய் அமைந்த கருணாகரன் வண்டை நகரின்கண் இருந்து சோழநாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்துவந்ததால் 'வண்டையர்க்கரசு' என்று சுட்டப்பெறுகின்றான். தம்பியைப் போலவே தமையனும் பெரு வேந்தனான குலோத்துங்கனுக்கு உட்பட்ட பல சிற்றரசர்களுள் ஒருவனாய் நெருங்கிய நண்பனாக இருந்துவந்தான் என்று யூகம் செய்ய வேண்டியுள்ளது. இந்நட்புக் காரணமாகவே குலோத்துங்கன் பாலாற்றங்கரையில் பரிவேட்டையாடியபின் தன் பரிவாரங்களுடன் காஞ்சியில் வந்து தங்கியிருந்தனன் என்று கருத இடம் உண்டு. ஒரு தாய் வயிற்றுப் பிறந்த சகோதரர்களுள் மூத்தோனிருப்பவும் இளையோன் அரசியலில் தலைமை வகிக்க நேர்ந்தது;

ஒருகுடிப் பிறந்த
பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக
வென்னாது அவருள்
அறிவுடை யோனாறு
அரசுஞ் செல்லும்.

என்ற ஆன்றோர் வாக்குப்படி ஒக்குமென்றே கொள்ளவேண்டும்.

கலிங்கப்போரின் வெற்றிக்குக் கருணாகரத் தொண்டைமானின் அடலாண்மையும் பெருவீரமும் முதற்காரணமாகும். சோழப் படைகளால் அழிக்கப்பட்டன போக எஞ்சி நின்ற கலிங்கப் படைகள் சிதறியோடி ஒளிந்தன. தொண்டைமான் வாகைசூடி குலோத்துங்கனை வந்தடைகின்றான். இதனைக் கவிஞர்,

கடற்கலிங்கம் எறிந்துசயத்
தம்பம் நாட்டிக்
கடகரியும் குவிதனமும்
கவர்ந்து தெய்வச்
சுடர்ப்படைவாள் அபயனடி
அருளினோடுஞ்
சூடினான் வண்டையர்கோன்
தொண்டை மானே.

[சயத்தம்பம்-வெற்றித்தூண்]

என்று சிறப்பிக்கின்றார்.

முதற் குலோத்துங்கனது 45-ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற ஆலங்குடிக் கல்வெட்டில் இக்கலிங்கப் போரின் விவரம் குறிப்பிடப் பெற்றுள்ளது. கல்வெட்டின் அப்பகுதி வருமாறு :

வடதிசை வேங்கை
மண்டலங் கடந்து
தாங்கிய கலிங்கமுந்
தழலெரி பரப்ப
விலங்கல் போல
விளங்கிய வேந்தர்
விட்டவெங் கரியொடு
பட்டனர் புரளப்
பொருகோ பத்தொடு
போர்முக மதிர்வரு
கோமட் டையன்
மாதவ னெதிர்பட
எங்க ராய னிகலவ ரேச்சணன்
மாப்பிறளா(?)
மதகரியிராசணன்
தண்டுபதி யாகிய
தலைச்சே னாபதி

— 5ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 ‖ 15—6—57 ‖ இதழ் 39

ஒரே வழி!

உலகம் ஓரளவு மறுமலர்ச்சி பெற்று, பல நாடுகள் சுயேச்சை பெற்ற பிறகும்கூட, வீம்பும் வீராப்பும் இன்னும் ஒரு சில 'பட்டுக்குடை'களுக்குள் ஒளிந்துகொண்டிருப்பது வெட்கப்படத் தக்கதாகும். எதையும் தேவைக்கு மீறிச் சேர்ப்பனை - சேர்க்க நினைப்பவனை, உலகம் ஏசித்தீர்க்கும் காலவேகத்தில், இலங்கைப் பிரதமர் தோழர் பண்டார நாயகா தமிழர்களின் ரத்தத்தையும் பதம் பார்க்கத் தொடங்கி இருக்கிறார். எந்தக் கோணத்திலிருந்து எந்த வகையான சுதந்திர அரசியல் சட்டத்தை வகுத்தாலும், அந்தச் சட்டம் எதற்கும், இலங்கைத் தமிழரைக் கூட்டோடு அழிக்கும் சக்தி இருப்பதில்லை என்பதை உணர்ந்த அந்தப் 'பெரியவர்' இப்போது புதுப்புது மிரட்டல்களை அவிழ்த்துவிட்டுக்கொண்டிருக்கிறார். 'தி. மு. கழகத்துக்காரர்களை இலங்கைக்குள் நுழைய விடமாட்டேன்' என்கிறார். போகட்டும்! ஆனால், தி. மு. கழகத்துக்காரர்களை இலங்கைக்குள் வராமல் தடை செய்துவிடுவதால் இலங்கைத் தமிழர்களின் போராட்டம் சக்தியற்றுப் போய்விடுமென்று தோழர் பண்டாரம் கருதினால் அதற்காக நாம் பரிதாபப் படுகிறோம். தமிழகத்திலிருந்து தமிழர் படை போய்த்தான், இலங்கையில் போராட்டம் நடத்தவேண்டும் என்ற அவசியத்தில் இலங்கைத் தமிழர்கள் இல்லை. எத்தனை பட்டாளம் வந்தபோதும் எதிர்த்து நிற்கும் மனவலிவும், மொழிப்பற்றும் கொண்டவர்கள் இலங்கைத் தமிழர்கள். தமிழில்லையேல் உலகில்லை - என்கிற அளவுக்குக் கீர்த்தியைப் பெற்றிருக்கிற பரம்பரையினர் அவர்கள். ஒரு காலத்தில் ஈழத்தை வென்று பண்டார நாயாகாவின் பாட்டன்மாரை தாழ்பணிய வைத்த ராஜாதிராஜன், இன்றைய போராட்ட வீரர்களின் மூதாதை.

ஆனால் பண்டாரமோ பயம் காட்டுகிறார் - துரைத்தனம் தன் வசம் என்ற ஆணவத்தில் பேசுகிறார். "நேரு வந்தார், அவர்கூடத் தமிழர் பற்றிப் பேசவில்லை. இவர்களால் என்ன செய்யமுடியும்" என்ற மமதையில் கண்ணை மூடிக்கொண்டே தீயைக் கக்கிக்கொண்டிருக்கிறார். குட்டி முதலாளிகளுக்கெல்லாம் 'மேலாள்' போலிருந்து விட்டுப்போன வெள்ளையரின் பழுதுபட்ட ஜனநாயகத்தை வைத்துக்கொண்டு - அவர்கள் காட்டிய எல்லைகளை எண்ணிக்கொண்டு 'சிங்களத் தளகர்த்தர்' துள்ளிக் குதிக்கிறார். அந்த வெறியாட்டத்திற்கு தமிழ்நாட்டு மானங்கெட்ட மந்திரி சபை தாளம் போட்டுக்கொண்டிருக்கிறது. டில்லியிலே இருக்கிறாரே பெரிய மனிதர் - தரணியின் புகழ்விளக்கு தமிழ்நாட்டு அகல்விளக்கு - நேருப் பண்டிதர் - அவர் இது பற்றியெல்லாம் பேசமாட்டார் - தனிப்பட்ட மார்வாடியின் குடும்ப விஷயம்கூட அவருக்குப் பிரதானமாக இருக்கும்; ஆனால் இலங்கைத் தமிழர் பிரச்சினை மிகச் சிறிது. பேசவே அவருக்கு நேரமிருக்காது. ஆனால் இலங்கைக்கு, இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக வைப்பதிலே மட்டும் நேருப் பண்டிதர் கவனமாக புதுப்புது மார்வாடியாகவே வைத்துக் கொண்டிருப்பார். எல்லாவற்றிற்கும், ஜனநாயகம், மெஜாரிடி என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்கிறவர்கள், இலங்கையைப் பொறுத்தமட்டில் அந்த ஜனநாயகத்தை ஏன் அமுலுக்குக் கொண்டுவரவில்லை? பத்து லட்சம் தமிழர்கள் இலங்கையில் இருக்கிறார்கள். ஆனால் வடநாட்டுக்காரர்களின் எண்ணிக்கை தொண்ணூறாயிரம்தான். ஸ்தானிகர் மட்டும் வடநாட்டுக்காரர்தான். இது எந்தப் 'பஞ்சசீலர்' தயாரித்த ஜனநாயகத்தில் இருக்கிறதோ நமக்குப் புரியவில்லை.

இங்கே இருக்கிற கதர்ச் சட்டைக்காரர்கள் வரட்டு கௌரவம் பார்க்கிறார்கள். துணிந்தவர்கள் 'அந்த'ச் சட்டை போடமுடியாது. இந்த 'கௌரவப் பிச்சை'க்காரர்களின் 'டம்பாச்சாரி' வேடத்தை அங்கே இருக்கிற பண்டாரம் நன்றாகப் பயன்படுத்திக்கொள்கிறார். இதற்கெல்லாம் வழி இல்லாமலில்லை. நேரு கண்மூடி மௌனியாக இருக்கலாம்; காமராஜர் நந்தி போல் குறுக்கே படுத்துக் கிடக்கலாம். பண்டார நாயகா இலங்கையில் சட்டப் புத்தகத்தை வைத்துக்கொண்டு மிரட்டலாம். மிரட்டலும் உருட்டலும், தமிழ்நாடு இந்தியத் துணைக்கண்டத்து ஒரே அரசியல் சட்டத்திற்கு உட்பட்டிருக்கும் காலம் வரைதான் நிலைக்கும் என்பதை, 'தமிழ் மக்களைப் பாழ்படுத்தும்' பெருஞ் சதியில் ஈடுபட்டிருப்போர் உணரவேண்டும். தமிழ்நாடு பிரியும் நாள் வெகு தூரத்திலில்லை. தமிழர் தமிழ்நாடு கண்டவுடன், ராஜாதி ராஜர்கள் ஈழங்கொள்ள முரசு கொட்டுவர். எனவே பண்டார நாயகா எதிர்காலத்தை உணர்ந்து நடப்பது அவருக்கும் இலங்கைக்கும் பயன் தரும் என நினைவுறுத்துகிறோம். ★

பன்மொழிப் புலவர் மணி விழா

அறிஞர் **அண்ணா** அவர்கள்
பொருளாளர்.

நமது நாவலர் விழாக்குழுத் தலைவர்.

இயக்கத் தோழர்களே! இன்தமிழ்க் காளைகளே!
அனுப்புங்கள்! அனுப்புங்கள்!

இந்த வாரத் 'தென்றல்' மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு செய்தியை வெளியிடுகிறது. பன்மொழிப் புலவர் மணிவிழாக் குழுவுக்கு, நமது நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைவராகவும், அருமை அண்ணா அவர்கள் பொருளாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். விழா வெற்றிகரமாக நிறைவேறும் என்பதற்கு, இதைவிட வேறு என்ன வேண்டும்! அறிவுசான்ற பெருந்தகை அப்பாத்துரையார் அவர்களது மணிவிழாவையும், நிதிவசூலையும், நமது அரும்பெரும் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, மெய்சிலிர்க்கிறது; மனம் ஆனந்தக் கூத்தாடுகிறது.

இன்று தலை சிறந்து விளங்கும் புத்தக நிலையங்களில் பல, பன்மொழிப்புலவரின் நூல்களாலேயே தங்களை உயர்த்திக் கொண்டன என்றால் மிகையாகாது. அந்த நூல் நிலையங்களும் பன்மொழிப் புலவருக்குத் தங்கள் நன்றியைச் செலுத்தச் சரியான சந்தர்ப்பம் வாய்க்கிறது. மாணவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! பன்மொழிப் புலவர் நிதிக்கு உங்கள் பங்கை அனுப்புங்கள்! விழாத் தேதி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அறிவிக்கப்படும்.

நிதி அனுப்பவேண்டிய புதிய முகவரி:—

சி. என். அண்ணாதுரை,
பொருளாளர்,
பன்மொழிப்புலவர் மணிவிழா,
'அறிவகம்'
24, சூரியநாராயண செட்டி தெரு,
இராயபுரம், சென்னை-13.

★ பகையைக் கூறு கூருக்கிய கோ! ★

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

மண்டலிக தாமய னெண்பாத்(?)
திசைமுகன்
போத்தயன் கேத்தணன்
செருச்சே னுபதி
என்றிவ ரனைவரும்
வெற்ற வேழத்தொடு
பட்டு மற்றவர்
கருந்தலை யோடு
வெண்ணிணங் கழுகொடு
பருந்தலைத் தெங்கணும்
பரப்ப வுயர்த்துத்
தருங்கட லாடைத்
தராதலந் திறந்து
கலிங்க மேழுங்
கைக்கொண் டொருபகல்
... ...
வீரசிம் மாசனத்து
வீற்றிருந் தருளின
கோவிராச கேசரி வன்மரான....
ஸ்ரீ குலோத்துங்க
சோழதேவர்க்கு—"

இப்பகுதியிலிருந்து கருணாகரன் சேனையுடன் எதிர்த்துப் பட்ட கலிங்க சேனாபதிகள் இன்னாரின்னார் என்பதை அறியலாம் ஆனால் சில பெயர்கள் தெளிவாக அறியக்கூடவில்லை. அபயனது ஏனைய கல்வெட்டுக்கள் யாவும் கலிங்க வெற்றியை பொதுவாகத்தான் சிறப்பித்துக் கூறுகின்றன. இக்கல்வெட்டு மட்டிலுந்தான் விவரமாகச் சிறப்பித்துக் கூறுகின்றது. இதனுள் காணும் எங்கராயன்தான் கருணாகரனை எதிர்க்காது அவனுடன் சந்து செய்துகொள்ளும் படி கூறினவன். இது,

என்று கூறவே யெங்க ராயனுன்
ஒன்று கூறுவன் கேளென்று
ணர்த்துவான்.

என்ற பரணித் தாழிசையால் அறியப்பெறுகின்றது.

மேற்கூறிய கல்வெட்டினால் குலோத்துங்கனது 45-ஆம் ஆட்சி ஆண்டிற்கு முன்பு (கி. பி. 1115) கருணாகரனது படையெடுப்பு நடந்திருக்க வேண்டுமெனபது பெறப்படும்.

குலோத்துங்கன் மகனான விக்கிரம சோழன் அக்காலத்தில் இளவரசனாக இருந்தனன் என்றும் அவனும் கருணாகரனுடன் கலிங்கப்போருக்குச் சென்றனன் என்றும் ஆங்கு நடந்த போரொன்றில் வெற்றி பெற்றான் என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுவர். அவ்வரலாறு உண்மையாக இருந்திருந்தால் அப்போருக்குச் சென்றிருந்த சேனாபதி உபசேனாதிபதிகளின் பெயர்களை எடுத்துச் சிறப்பித்துக்கூறும் சயங்கொண்டார் அந்த இளவரசனைச் சிறப்பித்துக் கூறாததாலும், வேறு கல்வெட்டுச் சான்று இல்லாததாலும் அதைப் உறுதிப்படுத்தக் கூடவில்லை. ஆனால் விக்கிரம சோழனின்,

தெலுங்க வீமன்
விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக்
கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து
வெம்படைத் தாங்கி
வேங்கை மண்டலத்
தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளி

என வரும் மெய்க்கீர்த்தியுள் குறிப்பிடப்பெறும்கலிங்கப்போர் அபயன் கி. பி. 1095-6ல் மேற்கொண்ட தென்கலிங்கப் போரைக் குறிக்கும் என்று திரு. மு. இராகவய்யங்கார் குறிப்பிட்டுள்ளார்கள். இரண்டாம் முறையாக அபயன் நடத்திய வடகலிங்கப்போர் அவன் ஆட்சி முடிவிற்குச் சில ஆண்டுகட்குமுன் கருணாகரன் நடத்தியதாகும். ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன் உலாவில்,

"ஏனைக் கலிங்கங்கள்
ஏழனையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே"

என்று பாடியது முதற்கலிங்கப் போரையே குறிக்கும் என்பது திரு அய்யங்கார் அவர்களின் கருத்தாகும். கல்வெட்டுப் பரிசோதகரும் இம்முடிவை ஒத்துக் கொண்டுள்ளனர்.

கலிங்கத்துபபரணிப் பிரதிகளிலும், தண்டியலங்கார மேற்கோள்களிலும் கலிங்கப்போரையும் கருணாகரனையும் பற்றிக் காணப்பெறும் ஒரு சில பழம் பாடல்களை ஈண்டு கூறுதல் ஏற்புடைத்து.

தடங்குலவு நாண்மாலைத்
தாமத்தன் கையில்
விடங்குலவு வெள்வாள்
விதிர்ப்ப—நடுங்கியதே
கோண்மேவு பாம்பின்
கொடுமுடிய தல்லவோ
வாண்மே வியகலிங்கர் மண்.

சரநிரைத் தாலன்ன
தண்பணி தூங்கத்
தலைமிசைச்செங்
கரநிரைத் தாரையுங்
காண்பன்கொ லோகலிங்
கத்துவெம்போர்
பொரநிரைத் தார்விட்ட
வேழமெல் லாம்பொன்னி
நாட்டளவும்
வரநிரைத் தான்றொண்டை
மான்வண்டை மாநகர்
மன்னவனே.

இப்பாடல்கள் இரண்டும் சென்னை 'மியூசியம்' கையெழுத்துப் புத்தகசாலையிலும், தஞ்சைச் சரசுவதி மாலிலும் உள்ள பரணிப் பிரதிகளின் இறுதியிற் கண்டதாக திரு. மு. இராகவய்யங்கார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கரடத்தான் மாரியுங்
கண்ணுல் வெயிலும்
நிரைவயிரக் கோட்டா
னிலவுஞ்-சொரியுமால்
நீளார்த் தொடையதுல
னோரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்.

கோட்டந் திருப்புருவங்
கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த
கொடைச்சென்னி-நாட்டஞ்
சிவந்தன வில்லை
திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெற.

ஒருவ ரொருவர்மேல்
வீழ்ந்துவட நாடர்
அருவ ரருவரென
வஞ்சி-வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர்
சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்தபோது

இவை மூன்றும் தண்டியலங்கார மேற்கோள் பாடல்கள்.

இனி 'ஸௌக்திரத்நஹாரம்' என்ற வடமொழி நீதித்திரட்டை எழுதி 'குலசேகரன்' என்று தன் அரசன் பெயரிட்டு வழங்கியவன் குலசேகரனுடைய தலைமை அமைச்சனான காலிங்கராயன் என்பவன் என்றும், அக்காலிங்கராயன்தான் அபயன் சேனாதிபதியாகவும் சிதம்பரம் முதலிய கோவில்களில் திருப்பணி செய்தவனாகவும் கல்வெட்டுக்களால் அறியப்படும் காலிங்கராயனேயாதல் வேண்டுமென்றும், இக்காலிங்கராயனது கல்வெட்டுக்களில் இவனுக்கு அருளாகரன் என்ற மறுபெயரும், தன்னரசனை அபயன் பொருட்டு வடநாட்டு அரசருடன் போர்கள் பல புரிந்த செய்தியும் காணப்படுதலால் இவனே அவ்வபயனுடைய தலைமைச் சேனாபதியாய்க் கலிங்கமெறிந்த கருணாகரனாக வேண்டுமென்றும், வண்டை என்ற ஊரின் தலைவனாகக் கருணாகரனையும், மணவில் என்ற ஊரின் தலைவனாக இக்காலிங்கராயனையும் பரணியும் கல்வெட்டுக்களும் முறையே வேறுபடக் கூறினும், முதலில் வண்டையிலிருந்த கருணாகரனே கலிங்கப்போருக்குப் பிறகு மணவிலைத் தனக்குரிய ஊராக மாற்றியிருக்கக் கூடுமென்றும், ஸௌக்திரத்நஹாரத்தில் 'குலசேகரன் அமைச்சனாக இக்காலிங்கராயனைக் கூறியிருப்பது, அக்குலசேகரப் பெயர் அபயனுக்குரியதென்பது 'வாழி சோழ குலசேகரன்' என்ற பரணித் தொடரால் அறியப்படுதலால், அவ்வபயனே அந்நீதி நூல் கூறும் குலசேகரன் என்றும் திருவனந்தபுரம் கல்வெட்டுத் துறைத் தலைவராக இருந்த திரு. ஏ. எஸ். இராமநாத அய்யரவர்கள் கூறுவர். இவற்றுள் குலசேகரன் மந்திரி காலிங்கராசன், மணவிற் காலிங்கராயனான அருளாகரன், கலிங்கம் வென்ற கருணாகரன் ஆகிய மூவரும் ஒருவரே என்பது திரு. அய்யரவர்களின் முடிபாதல் பெறப்படுகின்றது.

இக்கருத்தைத் திரு. மு. இராகவய்யங்கார் அவர்கள் மறுத்து, ஸௌக்திரத்நஹாரம் செய்தகாலிங்கராசனும்,அபயன் சேனாதிபதிகளுள் ஒருவனான மணவிற் காலிங்கராயனும் அவன் தலைமைச் சேனாதிபதியான வண்டைக் கருணாகரனும் மூவேறு தலைவர்கள் என்றும், அம்மூவரையும் ஒருவராகக் கொள்ளுவதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லையென்றும் தெளிவாக ஆராய்ந்து முடிவுகட்டியுள்ளார்கள். கருணாகரனைப் பற்றி அறிய விரும்பும் அன்பர்கள் அப்பகுதியையும் படித்தறிந்து கொள்வார்களாக.

கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி

தமிழ் இலக்கிய ரசிகர்களுக்கு இப்போது நல்ல 'வேட்டை'. புலவர் பெருமக்கள், தங்கள் வழக்கமான நடையைக் கைவிட்டு எளிய நடையில் இலக்கியச் சுவைகளை அள்ளித்தரத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்த வரிசையில், ஒரு சுவைமிக்க நூல் இப்போது வந்திருக்கிறது. வித்துவான் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் எழுதி, காரைக்குடி செல்வி பதிப்பகம் வெளியிட்டுள்ள 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி' என்ற நூல்தான் அது.

கலிங்கத்துப் பரணியின் கருப்பொருள் வழங்கும் பல்வேறு சுவைகளையும் ஆசிரியர் நயம்பட எடுத்து விளக்கியுள்ளார். படிக்கப் படிக்க சுவை அதிகரிக்கிறது. 'பரணி'யின் செய்யுள் நடைகள் ஆசிரியரது விளக்கத்தால் நம் மனதை அதிகம் ஈர்க்கின்றன. பிற்கால எளிமை நயத்தோடு விளங்கும் 'பரணி' நவீனக் கவிஞர்களுக்கு நல்ல தோர் முன்னோடி என்றால், இந்நூல் அதற்கொரு பெருந் துணை.

மேற்படி நூலின் பிற்சேர்க்கையாக, ஆசிரியர், 'பரணி புகழும் கருணாகரத் தொண்டைமானைப்பற்றி ஒரு விளக்கம் தந்துள்ளார். அதைத்தான் நீங்கள் பிறிதொரு புறத்தில் காண்கிறீர்கள்.

வரலாறுகள் மன்னர்களைப் பற்றிச் சொன்ன அளவு தளபதிகளில் யாரையும் பற்றிச் சொல்லவில்லை. கருணாகரன் வரலாறு, மறவர் குலத்திற்குத் தினவு தருவதாகும்.

வெளியிட்டோர் : செல்வி பதிப்பகம், காரைக்குடி
விலை ரூபாய் இரண்டு.

தென்றல்

மும்முனைப் போராட்ட மலர்

ஏஜண்டுத் தோழர்களின் விருப்பத்திற்கிணங்க எட்டணுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

★ மனம் கடலளவு – உலகம் கடுகளவு! ★

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

ஆண்டு வரலாறும் நமக்கு இதைத்தான் சொல்கிறது: 'செய்! அல்லது செத்துமடி!'

வாழ்கின்ற காலத்திலும், வாலிப காலம் மிகவும் சுருங்கியது. பதினாறு வயதிலிருந்து நாற்பத்தைந்து வயது வரைக்குமே வாலிப காலம்தான் என்று வைத்துப் பார்த்தாலும், இந்த முப்பது ஆண்டுகளும் 'படபட' வென்று ஓடிவிடுகின்றன. எவன் ஒருவனுக்காகவும் காலம் காத்திருப்பதில்லை. பதினாறு வயதிலிருந்து, முப்பது வயதுவரை தான் சரியான இளம்பருவம். அடுத்த பருவம் மறு ... தாய்ப்புப் பருவம். இது அவ்வளவு சுவை உடையதல்ல. முதல் இளம் பருவகாலத்தில், வாழ்க்கையை அழகுள்ளதாக ஒழுங்குபடுத்தி, இன்பமுள்ளதாகச் செயல்படுத்திக் கொள்ள வேண்டும். நல்ல மனைவியும், நல்ல குழந்தைகளும் இதை மேலும் தரமுடியும். இந்தப் 'புகழிற் புகழ் ஞாலம்' பெண்ணின் 'வாள் நெடுங்கண்' ணுக்கு விலையாகுமென்கிறான் ஒரு கவிஞன். அண்டத்திலே ஒரு அணு பெண். அவள் உருவில் ஒரு அணு அவள் கண். அணுவில் அணுவான கண்ணுக்கு, அண்டத்தைவிலையாக்கு கிறான் கவிஞன் என்றால், அவன் மனம், தான் விரும்பும் பொருளுக்கு அவ்வளவு மதிப்பைத் தருகிறது என்பது பொருள். தன் வார்த்தைகளிடத்தும், தன் சித்தும் கவிஞனுக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்கிறது என்று பொருள். அந்த நம்பிக்கையைக் குடும்பத் தலைவன் கொண்டு தன் மனைவி மக்களை ரசிக்கவேண்டும். மனைவி பேசும்போது காதல் தேனூறு ஊற்றெடுக்கிறது. குழந்தை தத்தித் தத்தி மழலை பயிலும்போது பாசம் ஆறாக ஓடுகிறது. 'அப்பா!' என்று குழந்தை அழைத்தால், அதை அம்மாவும் கேட்கவேண்டும் என்று ஆசைப்படுகிறான் தலைவன். அந்த நேரத்தில் அன்றதொரு உலகம் இருப்பது, அவன் கண்ணுக்கு மறைந்து விடுகிறது அவன் குடும்பம் உலகமாகிறது. அந்தக் குறுகிய எல்லைக்குள், திறவாத காவியம் படைக்கப்படுகிறது. பிள்ளைகள் நிறையப் பிறப்பதில் தொல்லைகள் இருக்கலாம். ஆனால், அதையே சுகமாக மாற்றியமைத்துக் கொள்ளப் பயிற்சி வேண்டும். ஏழு குழந்தை பிறந்தாலும், ஏழ்மையும் வாழ்க்கையின் இன்பமாக மாற்றிக் கொள்ளவேண்டும். இந்தப் பக்கம் கணவனும், அந்தப் பக்கம் மனைவியும், நடுவிலே ஏழு குழந்தைகளும் தூங்கும் காட்சி, எவ்வளவு அழகாக இருக்கிறது! இதை ரசிக்கத் தெரிய வேண்டும்: 'ஆஹா...இரண்டிலே தோன்றியது ஏழு! ஆண்டவனுக்கு அடுத்த சிருஷ்டிகர்த்தா!'

வாழ்வில் நகைச்சுவை வேண்டும். சிரிக்கத் தெரிந்தவன் தான் மனிதன். சிரிக்காதவன் மிருகம். பெரியவர்களெல்லாம் நாம் படித்துச்சிரிப்பதற்கென்றே பல விஷயங்களைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். சர்ச்சில் நகைச்சுவையில் வல்லவன். துணிந்தவன். அவன் ஒருமுறை சொன்னான்; 'மேடையில் பேசும் போது கால் நடுங்குகிறதா, கண் சொருகுகிறதா, நாக்குக் குளறுகிறதா, பயமாக இருக்கிறதா? அப்படியானால் ஒன்று செய்! உன் முன்னால் உட்கார்ந்து கேட்பவர்களெல்லாம் முட்டாள்கள் என்று எண்ணிக்கொள்! பேச்சு 'மள மள'வென்று வரும்' – அவன் இப்படித்தான் பேசப் பழகினானாம்! அதனால்தான் நகைச்சுவையாகப் பேச வந்ததாம். இது எல்லோருக்கும் வராது. வந்தால் இது நல்ல வழிதான். எதிரி ஆத்திரமூட்டினாலும் நாம் நகைச்சுவையாகப் பதில் சொல்ல வேண்டும். இதில் எனக்குப் பயிற்சி இல்லை. யாராவது ஆத்திரமூட்டினால் எனக்குக் கோபம் வருகிறது. ஆனால் அண்ணாவும், நாவலரும், சம்பத்தும் இதை எப்படியோ பெற்றிருக்கிறார்கள். எவ்வளவுதான் ஆத்திரப்படுத்துங்கள், அண்ணாவுக்குக் கோபம் வராது. சிரித்துக்கொண்டே நகைச்சுவையாகப் பதில் சொல்கிறார். அதுவே எதிரியைக் குத்துகிறது. குடைகிறது. பெரியார் அவரைக் கேவலமான வார்த்தைகளால் திட்டினார். அப்போதும் அண்ணா பெரியாரைக் கொண்டே காங்கிரஸ்காரர்களைச் சாடினார் 'பெரியார் எங்களைத் திட்டுவது வெறும் ஒப்புக்குத்தான். உண்மையில் அவர் திட்டவில்லை. நாங்கள் காங்கிரசுக்கு வெளியிலிருந்து தாக்குகிறோம். அவர் உள்ளே புகுந்து குடைகிறார்' என்று அண்ணா சொன்னார். காங்கிரசுக்காரர்கள் பலர் இதை நம்பினார்கள். பெரியாரைத் தங்கள் தேர்தல் கூட்டத்திற்கு வரவேண்டாம் என்றார்கள் சிரித்துக்கொண்டு அவர் சொன்ன பதில், அவ்வளவு ஜீவனுள்ளதாக இருந்தது. இந்த முறை எனக்கு வரவில்லை. ஆனால், வர வேண்டுமென்பதற்காக மிகவும் பிரயாசைப்படுகிறேன். இது தான் உலகத்தை நன்றாகப் புரிந்துகொண்டவர்கள் கையாளக் கூடிய முறையாகும். அண்ணாவின் இந்த முறை எல்லா வகையிலும் பயனளித்தே வந்திருக்கிறது. ஆழ்ந்த நகைச்சுவைக்கு, அவ்வளவு உயிர்ச்சக்தி உண்டு. ஆத்திரத்தைக் காட்டிலும் அது அதிகம் பயன் தரும்.

அதே நேரத்தில், மனிதனுக்கு ஒரு பொறுமை உணர்ச்சியும் வேண்டும். குடும்பத்திலேயே பார்க்கிறோம் — முதற்குழந்தை பிறந்த ஓராண்டிலேயே மறு குழந்தை பிறந்துவிட்டால், முதற் குழந்தையின் சிங்காதனமாக இருந்த தாயின் மடி, இரண்டாம் குழந்தைக்குப் போய்விடுகிறது. முதற் குழந்தை ஒதுக்கப்படுகிறது. ஒரு வயதுப் பருவத்திலேயே இது அந்தக் குழந்தைக்குப் புரிகிறது. தாய் இல்லாத நேரத்தில் கைக்குழந்தையை அது கிள்ளுகிறது. அடிக்கிறது. 'போ...போ...!' என்கிறது. தாயினுடைய மடியில் தான் போய் உட்கார்ந்து கொள்கிறது. 'பாப்பா வேண்டாம். பாப்பா வேண்டாம்' என்கிறது. யாராவது 'நான் பாப்பாவைத் தூக்கிக் கொண்டு போகட்டுமா?' என்று கேட்டால் 'போங்கள்' என்கிறது. தாயிடத்தில் தனக்குள்ள இடத்தை, இரண்டாவது குழந்தை பறித்துக் கொள்கிறது என்பதில், முதல் குழந்தைக்கு அவ்வளவு பொறாமை. ஒரு வயதுக் குழந்தைக்கே இவ்வளவு பொறாமை என்றால், பெரியவர்களுக்கு இது ஏற்படுவதில் தவறில்லை. தவறில்லை என்பது மட்டுமல்ல, இந்தப் பொறுமை தேவைகூட. ஆனால் இது அடுத்தவரைக் கெடுப்பதாக இல்லாமல், அவனைவிடத் தன்னை உயர்ந்தவனாக ஆக்கிக் கொள்வதில் அடையவேண்டும்.

வாழ்வில் துணிவு வேண்டும். எதையும் 'தெரியாது, தெரியாது' என்று சொல்லாமல் 'தெரியும்' என்று சொல் வேண்டும். தெரிந்து கொள்ளவும் வேண்டும். நான் தெரிந்ததைத் தெரியும் என்று சொன்னதை விட 'தெரியும்' என்று சொல்லி விட்டுத் தெரிந்துகொண்டது அதிகம். பெரும்பாலும் இது என் வாழ்வில் பயன் தந்திருக்கிறது.

ஆகவே, துணிவு வேண்டும். திறமை வேண்டும். அழகு வேண்டும். அன்பு வேண்டும். காதல் வேண்டும். பாசம் வேண்டும். துளிக்கூடத் துன்பமும், பயமுமின்றி வாழப் பழகவேண்டும். இவ்வளவையும் நாம் பெற்றாகவேண்டும். பெற்றால் மனம் கடலளவு விரிகிறது. உலகம் கடுகளவு சுருங்குகிறது. இவ்வளவையும் எதிலிருந்து பெறமுடியும்? என்று நீங்கள் கேட்கலாம். முடியும்! ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள் கடலளவு. அதன் முன்பு உலகம் இவ்வளவுதான் : கடுகளவு!

★ ★ ★

— 8ம் பக்கத் தொடர்ச்சி —

வரலாறுகள் முதலிய அனைத்தையும் காட்டுகிறார். அதனால் ஆசிரியரின் கருத்துக்களுக்கு நல்ல அடித்தளம் அமைந்து விடுகிறது. சுருங்கச் சொன்னால், ஆசிரியர் தொடாத ஆதாரமில்லை. சொல்லாத நிகழ்ச்சிகள் இல்லை. போர் நடந்த ஒரு ஊரைக் குறிப்பிடும் போது, இன்றைக்கு அந்த ஊர் என்ன பெயரில் இருக்கிறது என்பதைப் பெரும்பாலும் ஆசிரியர் கூறி வைத்திருக்கிறார். அதிலே சரித்திராசிரியர்களுக்குள் எழும் முரண்பாடுகளையும் தீர்த்து வைத்திருக்கிறார். போர்களுக்கான அடிப்படைக் காரணங்களையும் விளக்குகிறார். வீழ்ச்சியும் மீட்சியும் என்ற பெரிய அத்தியாயத்தில், ஒவ்வொரு அரசுகளும் சரிந்த கதையை ஆசிரியர் கூறும் முறை, ஈடு இணையற்றதாக விளங்குகிறது. எத்தனை அரசுகள்! அவற்றுக்குத்தான் எவ்வளவு வேதனைகள்! அரசுகளைத் தூக்கி நிறுத்த அரசர்கள் படும் பாடுகள்தான் எவ்வளவு! விஜயநகர மரபு எங்கே, தஞ்சை நாயக்க மரபு எங்கே, பின் வந்த மராட்டிய மரபு எங்கே, சேதுநாடு எங்கே, மைசூர் எங்கே, பிஜப்பூர் எங்கே, திருவாங்கூர் எங்கே, செஞ்சி எங்கே, வேலூர் எங்கே, அகமதுநகர் எங்கே, பாமினிப் பேரரசு எங்கே — அப்பப்பா இந்திய உபகண்டம் முழுவதிலேயும் இருந்த, பல்வேறு அரசுகளும் விழுந்ததையும், எழுந்ததையும் ஆசிரியர் ஒன்று விடாமல் விவரிக்கிறார். அதுமட்டுமல்ல, வெள்ளைக்காரன் புகுந்த விதம், கட்டபொம்மனும், மருது பாண்டியரும், திப்பு சுல்தானும் எழுந்த விதம், அந்த எழுச்சியிலே அவர்கள் விழுந்த விதம், வெள்ளை ஏகாதிபத்தியம் முழுக்க வேரூன்றிய விதம், தேசிய வாழ்வில் புது மறுமலர்ச்சி ஏற்பட்ட விதம், வ. உ. சி.யின் சுதந்திரப் போராட்டம், விடுதலை — இவ்வளவையும் ஆசிரியர் நூலிலே கொண்டுவந்து விட்டார்.

நூலின் முற்பகுதியில் ஆண்டு வாரியாக ஒரு குறிப்பையும் படைத்துள்ளார். சுருங்கச் சொன்னால் இது ஒன்றே தமிழனுக்குச் சரியான வரலாறு! இந்த நூலைப் படிக்காதவர்கள் வரலாற்றில் முழுமை பெறாதவர்கள். இந்த நூல் இல்லாத நூலகம், பெருங் குறைபாட்டுக்கு ஆளாகும். ஆட்சியாளர்கள் நல்லெண்ணத்தோடு இதைப் படித்துப் பார்த்தால், தமிழகம் முழுவதும் எல்லாக் கல்லூரிகளுக்கும் இது பாடநூலாக இலங்கும்.

நூலின் தரத்தையும், தகுதியையும் பார்த்தால் ஏழு ரூபாய் விலை இதற்கு மிகவும் குறைவு. குப்பை கூளங்களுக்குப் பணத்தைக் கொட்டும் இளைஞர்கள், முக்கியச் செலவில் மிச்சம் பிடித்தாவது, இந்த நூலை வாங்க வேண்டியது அவசியம்.

வெளியிட்டோர் & கிடைக்குமிடம்:

ஔவை நூலகம்,
4/141, பிராட்வே,
சென்னை-1.

குறளின் எச்சரிக்கை !

"இடிக்குந் துணையாரை
ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமையவர்"
—குறள்.

உலகம் உய்ய வழிவகுத்துத் தந்த உலக முதல்வனால், அரசியலிலே உள்ள 'பெரியாரைத் துணைகோடல்' என்ற அதிகாரத்திலே, வகுக்கப்பட்டுள்ள முதுமொழி—குற்றம் கண்டவிடத்தே இடித்துரைத்து, ஆட்சியினரை நல்வழிப்படுத்தும் அறிஞர் பெருமக்களின் துணை கொண்டு நடத்தப்படும் ஆட்சியை கெடுக்கக்கூடிய ராஜதந்திரிகள் யார் இருக்கின்றனர்? என்று நம்மைப் பார்த்து — தமிழக மக்களைப் பார்த்து—ஏன் உலகத்தைப் பார்த்துக் கேட்கின்ற நேரத்திலே; நாம் தமிழக அரசியல் வானை மட்டும் ஒரு சிறிது கண்ணோட்டம் பார்ப்போம்.

அப்படிப் பார்க்கின்ற நேரத்தில் அந்த கேள்வியை, மக்களாட்சி நடத்துவதாக தம்பட்ட மடித்துக்கொண்டு, அவர்களின் கண்களைத் துடைப்பதற்காக பாகல்மேடு போன்ற இடங்களிலே 'நாடகம்' நடத்திவரும் ஆட்சியாளரைத்தான் நாம் கேட்கும் நிலையிலிருக்கிறோம்.

அப்படிக் கேட்கின்ற நேரத்தில், தென்னகத்தில், தருக்கர்களின் நுழைவுக்குப்பின், சமுதாயத்தில் ஏற்பட்ட சகதி நிறைந்த சாக்கடை எண்ணங்களை அகற்றி, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் கொள்கையை மூலைமுடுக்கெல்லாம் பரப்பி, பீடு நடை போட்டு இன்று அரசியல் வானிலே—காலைக் கதிரவன்-உதயசூரியன் போல் எழும்பியிருக்கிறது தி. மு. கழகம்.

அப்படி எழும்புகின்ற நேரத்திலே, வானத்தில் மப்பும் மந்தாரையாக இருக்கின்ற நாட்களில் எழும் பகலவன்போல் அல்லாமல், நன்றாக சுடர் ஒளி பரப்பி எழும் சூரியன் போல்தான் தி. மு. கழகம், அரசியலிலே நுழைந்திருக்கிறோம் என்பதை ஆட்சியாளர்கள் உணரும் பொருட்டு, தென்னகத்தின் அறிவு விளக்கு-அறிஞர் திலகம்-அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே சென்றுள்ள நம் கழகத் தோழர்கள், நல்ல காரியங்களை வாழ்த்தி வரவேற்று போற்றிப் புகழவேண்டிய இடங்களில் புகழ்ந்து குற்றம் கண்ட இடத்து கடிந்துரைத்து திருத்த முற்பட்டு செயல்முறையை விளக்கினர். அப்படி விளக்கும் நேரத்தில் நம்மை இழிபடுத்தி பேசுகின்றனர் ஆட்சியாளர்கள்.

அண்ணா அவர்கள், எங்களைக் காட்டி — எதிர்த்து அறிவுரை வழங்கும் எங்களைக் காட்டி தென்னகத்துக்குரிய நன்மைகளைப் பெற வழி செய்யுங்கள் என ஆட்சியாளருக்கு கோரிக்கை விடுகின்ற நேரத்தில், சிறுபான்மையோராக இருந்தும் இவர்கள் என்ன ஆணவத்தோடு பேசுகிறார்கள் என்று பெரும்பான்மையினரான சிறு மதியினர் கூட்டம் சொல்லாவிட்டாலும் நினைத்திருக்கக் கூடும். அதுதான் பெரியாருக்கு உள்ள தனிப் பண்பு-அவையஞ்சாமையும் குற்றங்களை எடுத்துக் கூறி திருத்தும் பண்பு—இது நம்முடைய வாதமல்ல, அவர்களால் அவர்களுக்காகவே நடத்தப்படும் ஏடுகளால் எழுதப்பட்ட உண்மையாகும்.

அத்தகைய நம்மவர்களை ஏசுகிறார்கள், ஆளவேண்டுமென்று எண்ணம் கொண்ட அகந்தையின் சொந்தக்காரர்கள்.

மக்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டு, வரிச்சுமையை மீண்டும் மீண்டும் போட்டு தொல்லைப்படுத்தி ஆறாத அல்லலுக்குள்ளாக்குகிறார்கள். அப்படிச் செய்யும் நேரத்தில் ஆட்சியாளருக்கு வள்ளுவரின் எச்சரிக்கையை கண்முன் கொண்டு நிறுத்த ஆசைப்படுகிறோம்.

பட்டத்துயானை தான் என்றாலும், மதம்பிடித்துத் திரியும் வேளை, எதிர்க்க எவரே துணிவர்: ஆனாலும் எதிர்க்கின்றான் ஒருவன். அதை வென்று மதத்தை அடக்கும் பொருட்டு. போரிடுகிறான். தமிழன் - முதுகு காட்டாத இனமல்லவா ?

ஆனால் மதம்பிடித்த யானையோடு அவன் தனியே போராடும் நேரத்தில், யானையும் தந்திரமாக தன் தந்தங்களை நீட்டி வீரனைக் குத்தி மேலே தூக்கிவிடுகிறது. வீரனைக் குத்திய வேகத்திலே வெற்றிநடை போட்டுச் செல்லுகிறது. வெற்றிகண்டு கண் தெரியாத நிலையில் செல்லுகின்ற நேரத்தில் சகதி நிரம்பிய குட்டையிலே காலை வைத்துவிடுகிறது. வைக்கத்தான் முடிந்ததே தவிர, காலை எடுக்கமுடியவில்லை.

இந்த நிலையை எட்ட இருந்த நரி ஒன்று பார்த்துக்கொண்டிருக்கிறது. சமயத்தை எதிர்நோக்கியிருந்த நரி, யானையின் மேலே பாய்ந்துவிடுகிறது. நல்ல உணவு! யானையோ எதிர்க்க வழியின்றி வேதனையோடு துடிக்கிறது. யானை சேற்றிலே அகப்படவில்லையாயின் நரியின் கதி அதோ கதிதான்! இதையே வள்ளுவர்,

**"காலாழ் களரில்
நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு."**

என்றார்

யானையின் வாயிலாக அரசுக்கு வேண்டிய அறிவுரையே தந்திருக்கிறார்.

மாவீரன் சிவாஜி இந்து மதமென்னும் சேற்றிலே கால்வைத்தால் தானே காகப்பட்டருக்கு அடிமைப்பட்டான்! ஏன்? உலகை அழகி கிளியோ பாட்ராவின் இன்பச்சேற்றிலே அகப்பட்டுக் கொண்டு தானே, சீசரும் ஆன்டனியும் தங்கள் சமுதாயத்தைக் கட்டிக்காக்க முடியாமல் போனார்கள் ?

மக்களை நரிகளாகவும் தங்களை யானையாகவும் நினைத்துக் கொண்டிருக்கும் ஆளவந்தார்கள் பார்வையில் குறளாரின் விளக்கம் படட்டும்.

ஆட்சியின் துணைகொண்டு, அகந்தைச் சேற்றிலே கால் வைத்து நின்று பார்க்கும் ஆட்சியாளர்கள், தேர்தல் என்ற குட்டையிலே சிக்க நேரும் பொழுது, தங்களால் நரிகளாக மதிக்கப்படும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றால்தான் காப்பாற்றப்படுவோம். இல்லையேல் சேற்றிலே சிக்கி நரியிடன் அகப்பட்ட கதைதான் நடக்கும்.

ஆட்சியாளருக்கு வள்ளுவர் தரும் எச்சரிக்கை இதுவே!

—துரை. இளங்கோவன்

வெளி வருகிறது!

"உயிர் ஓவியங்கள்"

கண்ணதாசன்

எழுதியது.

விலை ரூபாய் ஒன்று

விபரங்கட்கு:

பி. இராமசாமி அன் பிரதர்ஸ்,

"முத்துமாளிகை" : : சென்னை-4.

தைமூரின் காதலி...

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

பூக்காரி. தைமூர் டில்லியை அழித்துத் திரும்புகையில், பிண நாற்றம் தாளாமல் வெறிகொண்டவனைப்போல் சாமற்கண்டின் அருகில் ஒரு மூங்கில்காட்டில் மயங்கிவிழுந்து கிடந்தாராம். அப்போது கம கமவென்று ரோஜாப்பூவின் நறுமணம் காற்றில் மிதந்து வந்ததாம்! தைமூர் கண்களைத்திறந்து பக்கத்தில் நின்ற வீரர்களைப் பார்த்தார்.

"பூ மணக்கிறதே!...ஆமாம். ரோஜாதான் மணக்கிறது." என்றார்.

அமீர் இவ்வளவு சொல்லி விட்டால் போதாதா? உண்மையான சேவகர்கள், கண்டு வா என்றால் கொண்டுவருபவர்களாயிற்றே! நாலாபக்கமும் போய்த் தேடிப்பார்த்தார்கள். வடதிசை நோக்கிப்போன ஒரு கிழட்டுவீரன், பதினைந்து ரோஜா மலர்களையும், நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணையும் கொண்டுவந்தான்.

"பூதான் கொண்டுவந்தாய், இந்தப் பூவையையேன் கூட்டி வந்தாய் அலி!"-பாதுஷா கேட்டார்.

"பூக்களுக்குக் கைமாறு கேட்கிறாள் பூவை!"

"கைமாறு கேட்கிறாளா? பாவம்! மணம் விற்றுப் பணம் சேர்க்கிறாள் போலும்!" என்றார் பாதுஷா.

"குடும்பம் பெரிது பிரபு. அவர் இருந்தார் கவலையில்லாதிருந்தேன். பட்டு வியாபாரி குடும்பம் என்ற கொட்டு முழக்கத்தோடு வாழ்ந்தோம். அவர் காலமான பிறகு எனக்கு இந்தப் பூந்தோட்டம்தான் வயிற்றைக் கழுவுகிறது. ரதத்தைப்போல் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்யாணம் வேறு செய்யவேண்டும்......" என்று பூந்தோட்டத்துக்காரி சொல்ல ஆரம்பித்தாள்.

அவளுடைய தொனியிலே வாழ்ந்து கெட்ட பெருந்தன்மை ஒளிந்துநின்றது. கள்ளங்கபடமற்ற பரிதாபத் தோற்றம் அவளுடைய இளமைக்கால எழிலை சித்தரித்துக் காட்டியது.

அமீர் ஒரு பணப்பையைத் தூக்கி எறிந்தார். அவள், கீழே விழாமல் அதைப் பிடித்துக் கொண்டு வணக்கத்தோடு பிரிந்துசென்றாள். ஆனால் அவள் கொஞ்சதூரம்தான் போயிருப்பாள், தைமூரால் அனுப்பப்பட்ட சேவகன் தொடர்ந்து சென்று கைதட்டி அவளை நிறுத்தினான்.

(தொடரும்)



தென்னாட்டுப் போர்க்களங்கள்

— கண்ணதாசன் —

தமிழிலே வரலாற்று நூல்கள் அதிகம். என்றாலும் அவற்றில் காலவாரியாக வகைப்படுத்தித் தொகுக்கப்பட்ட நூல்கள் மிகவும் குறைவு. அதுவுமின்றி தமிழகத்து வரலாற்று ஆசிரியர்களுக்குள் முரண்பாடுகள் அதிகம். ஒவ்வொரு வரலாற்று ஆசிரியனுக்கும் கிடைத்த ஒவ்வொரு ஆதாரங்கள், அவன் எழுதும் வரலாற்றின் அங்கங்களாக அமைந்துவிட்டன. அதனால் கால வகையிலும், நிகழ்ச்சியிலும் ஒருவரிடத்தில் மற்றொருவர் முரண்படுவதைக் காண்கிறோம். வம்சாவழித் தொகுப்பிலேகூட, இத்தகைய முரண்பாடுகள் காணக் கிடக்கின்றன. இன்னார் மகன் இன்னார் என்பதில் கூட வரலாற்று ஆசிரியர்களுக்குள் ஒற்றுமை இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு உதாரணத்தைக், காரணத்தைக் காட்டுகிறார்கள். யாவுமே சரியாகத்தான் நமக்குப் படுகிறது. ஒவ்வொருவர் சொல்வதிலும் உண்மை இருப்பதாகத் தோன்றுகிறது. அதனால், எதிலும் ஒரு முடிந்த முடிவுக்கு நாம் வரமுடியவில்லை. பி.டி.சீனிவாசய்யங்கார் எழுதிய வரலாறும், டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் எழுதிய 'பிற்காலச் சோழர் சரித்திர'மும் டாக்டர் இராசமாணிக்கனாரின் சில நூல்களும், மு. இராகவய்யங்கார் எழுதிய சில சரித்திரங்களும் நம்மைத் திருப்திப்படுத்த முயல்கின்றன. இருந்தபோதிலும் ஆண்டுவாரியாகத் தொகுக்கப்பட்ட ஒரு வரலாற்று நூல் தமிழனுக்குத் தேவையாகவேதான் இருந்தது. இலக்கியக் குறிப்புக்களையும், கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் வைத்து வரலாறு தொகுக்கும்போது, தனித் தனி நிகழ்ச்சிகள் ஆதாரத்தோடு கிடைக்கின்றன என்றாலும் அவற்றை வைத்துக்கொண்டு காலத்தை நிர்ணயிக்க, வரலாற்று ஆசிரியர்கள் திணறினர்கள். இதனிடையிலும் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து, காலங்களின் நிகழ்ச்சிகளை எடுத்துத் தர அவர்கள் தவறவில்லை. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்திய செய்திகளெல்லாம், கற்பனை கலந்த மயக்கச் செய்திகளாகவே இருந்தன. அவற்றை எந்த அடிப்படையைக்கொண்டு வகைப்படுத்துவது என்பதில் தகராறுகள் தோன்றின. சங்க கால வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராய்வதற்குப் பெரும்பாலும் சங்க இலக்கியங்களைத் தவிர வேறு துணையில்லை. இலக்கியத்தில் நிகழ்ச்சி வருகிறதே தவிர, காலம் வரவில்லை. பாடல்களில் வரும் பராபரியான வரிகளைக் கொண்டுதான் வரலாற்று நிகழ்ச்சிகளை முழுக்க நிர்ணயிக்க வேண்டி வந்தது. ஆகவே, ஓரளவுக்குத் தங்களால் முடிந்த மட்டிலும், மூவாயிரம் ஆண்டு வரலாற்றுக்காலத்தைச்சரித்திரா சிரியர்கள் எடுத்துத் தந்தார்கள்.

இப்போது அதையும் வகைப்படுத்தி ஒரு அற்புதமான நூல் உருவாகியிருக்கிறது. போர்க்களங்களை அடித்தளமாகக் கொண்டு, அந்த வரலாறு ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கிறது. மிகுந்த சிக்கலும் சிரமமும் நிறைந்த வேலையை, எளிய இனிய முறையிலே செய்து முடித்திருக்கிறார் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள். புத்தகத்தைப் படிக்கும்போது நமக்கு மலைப்புத் தட்டுகிறது. எங்ஙனம் முடித்தார் இதை, என்று கேட்கத் தோன்றுகிறது. இத்தனை போர்க்களங்களா, என்று பிரமிக்க வைக்கிறது. வரட்டுத்தனமான வரலாற்றுப் போக்கில் போகாமல், கதைமாதிரி தொடர்கிறது. காலங்களைக் கடந்து வந்து நம்மை இழுத்துச் செல்கிறது. இதுவரை வெளிவந்த சரித்திரங்கள் எல்லாவற்றையும், ஒரே நூலில் ஆசிரியர் கொண்டு வந்துவிட்டார். தமிழ் மரபின் தொடக்கத்திலிருந்தே நூல் துவங்குகிறது. நிலவழியிலும், கடல்வழியிலும் தமிழன் செய்த அசகாய சூரத்தனங்களை, பாகம் பாகமாக நூல் விளக்குகிறது. மனித இனத்தின் நாகரிகத் துவக்கத்தையும் ஆசிரியர் மறந்துவிடவில்லை. தமிழ் இனத்தின் எழுத்தும், கலையும், நாகரிகமும் என்று பிறந்தன என்பதரும் ஆசிரியர் விளக்கம் தருகிறார். தமிழ் இனத்தில் ஒரு சாரார் தான் நடுக்கடலெங்கும் பரந்து ஸ்பெய்ன், பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாடுகளிலும் நடு அமெரிக்காவிலும் வாழ்ந்து நாகரிகம் வளர்த்தவர்கள் என்னும் ஈராஸ் பாதிரியாரின் கருத்தை அடித்தளமாக வைத்துக்கொண்டு, நூலின் ஒரு பகுதியை ஆசிரியர் வளர்த்திருக்கும் விதம், நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது! "எல்லாம் தமிழிலிருந்துதான் பிறந்தது' எனச் சொல்லிக் கொள்வதில் தமிழனுக்கு ஒரு அலாதி ஆசை'' என, மறுமலர்ச்சிச் சூரர்கள் சிலர் கதைத்தனர். அந்த ஆசை தவறானதல்ல என்பதை இந்த நூல் அழகுபட விளக்குகிறது. தமிழனுடைய நாகரிகம் அவ்வளவு உச்சியில்தான் இருந்தது என்றும், அதே நேரத்தில் பொதுவான மனித இனத்தின் வரலாறுபோல் நாள்பட நாள்பட வளர்ச்சியைக் காட்டாமல் தேய்ந்து வந்திருக்கிறது என்பதையும் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

சேர, சோழ, பாண்டிய பேரரசுகள் வாழ்ந்த வகையை ஆசிரியர் விரித்துரைக்கும் அழகு, அவருக்கே உரியதாகும். தமிழ்ப் பேரரசுகளின் போட்டியை விவரிக்க வந்த ஆசிரியர் அதற்கு அடித்தளமாக, உலக வரலாற்றையே ஒரு அத்தியாயத்தில் எடுத்துக் கொள்கிறார். இந்தச் சாதனையைப் பன்மொழிப் புலவரைத் தவிர, வேறு யாரும் செய்யமுடியும் என்று நமக்குத் தோன்றவில்லை. தமிழனுக்கு உலகத்தோடு இருந்த தொடர்பை, அதிலே அவர் விளக்குகிறார். 'மதுரைக் காஞ்சி'யைத் துணையாகக் கொண்டு, தென்குமரியிலிருந்து இமயமலை வரை தமிழர் ஆண்ட செய்தியை, ஆசிரியர் தரும் முறை, தனித்திறன் பெற்று இலங்குகிறது. நெடியோன் என்ற நிலந்தரு திருவிற்பாண்டியன்தான் இந்திய உபகண்டம் முழுவதையும் ஆண்டவன். 'மதுரைக் காஞ்சி'யில்,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லைத்
தொன்று மொழிந்து
தொழில் கேட்ப''

என வரும் மாங்குடி மருதனாரின் வரிகளையும், 'சிலப்பதிகார'த்தில் வரும்,

"பஃறுளியாற்றுடன் பன்மலை
யடுக்கத்துக்
குமரிக் கோடும்
கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும்
இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட
தென்னவன்''

எனும் வரிகளையும் ஆசிரியர் மேற்கோளாகக் காட்டுகிறார்.

இந்த நிலந்தரு திருவிற் பாண்டியன்தான், பரதகண்டம் முழுவதையும் ஒரு குடைக்கிழ் ஆண்டதாக இதிகாசங்களில் வரும் பரதனுவான் என, பண்டித சவரிராயன் அவர்கள் கூறியுள்ள கருத்தை, ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். பரதகண்டம் என்ற பெயரே, தமிழரசன் ஒருவன் பெயரை அடிப்படையாகக் கொண்டது என்பதில் தமிழனுக்குப் பெருமையில்லையா என்ன! ஆசிரியர் தம் கருத்தை உறுதிப்படுத்துவதற்கு வடமொழிக் கல்வெட்டுகள் சிலவற்றையும் துணைக்கொள்கிறார். பன்மொழி வல்லமை அவருக்கு இதில் மிகுந்த துணைபுரிகிறது. நிற்க,

சங்ககாலப் போர்களை மூன்று அத்தியாயங்களில் வரிசைப் படுத்தித் தந்த ஆசிரியர், அடுத்த அத்தியாயத்தில் பேரரசுகளின் போட்டிகளைப் பொதுவான முறையில் விமர்சனம் செய்துவிட்டு, அதற்கடுத்த அத்தியாயத்தில் சோழப்பெரும் பேரரசின் ஆரம்ப காலத்திலிருந்து தொடங்குகிறார். இதில் சோழர்கள் ஆற்றிய போர்கள் அனைத்தும், ஒன்றுவிடாமல் கொண்டு வந்துவிடுகிறார். சோழர்களின் போர்கள் எனும்போது, அவர்கள் பாண்டியரோடு, சேரர்களோடு, பல்லவர்களோடு, சளுக்கியர்களோடு, ஈழநாட்டாரோடு நடத்திய போர்கள் யாவும் வந்துதானே தீரவேண்டும்! அப்படி வரும்போது ஆசிரியர் தவறிவிடாமல், மற்றைய நாட்டவர்கள் வேறு நாடுகளோடு செய்த போர்களையும் அதிலேயே கொண்டுவந்து விடுகிறார். அதையும் சிக்கு விழாமல் செய்து முடிக்கிறார். எடுத்துக்கொண்ட தலைப்பை அடித்தளமாகவைத்து உள் நிகழ்ச்சிகளை விவரிக்கும் முறையில், ஆசிரியர் பங்கிட்டு செய்துகொண்டு வரும் வழி, மிக மிக அற்புதமாக அமைகிறது. இந்த சோழப் பெரும் பேரரசு எனும் அத்தியாயத்தை மட்டும் படித்தாலே, ஓரளவுக்கு தமிழகத்தின் வரலாறு முழுக்கப் பிடிபடுகிறது. போர் எங்கிருந்து எங்கு தாவிற்று என்பதை ஆசிரியர் ஆதாரத்தோடு ஒட்ட வைத்துக் காட்டும் முறை, இது வரை வரலாற்று ஆசிரியர்களால் கையாளப்படாத ஒன்றாகும். ஒரே நிகழ்ச்சிக்கு ஆதாரமாக இலக்கியம், கல்வெட்டு, துணை

— 6-ம் பக்கம் —

ரஷ்யா, ஏகாதியத்ய நாடா, முற்போக்கு சக்தியா?

ஒவ்வொரு சிறந்த கட்டுரைக்கும் ரூ. 25 பரிசளிக்கப்படும்.

★ தாக்காமல், காரண காரியங்களைமட்டும் விளக்க வேண்டும்.

★ 'தென்றலி'ல் மூன்று பக்கங்களுக்குமேல் போகக் கூடாது.

முடிவு தேதி: 1-8-57.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.